**தலைப்பு 331 – வாழ்வின் எழுச்சித் திணைக்களம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு 3(திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு நோக்கெல்லை

---

தலைப்பு 331 – வாழ்வின் எழுச்சித திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஜூலை 11 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக் வாழ்வின் எழுச்சித திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.17 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற்கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தல். | 1. செயல் நடவடிக்கைத் திட்டத்தை கடைபிடிக்காமை. | 2.1 |
| | | 2. பெறுகை நடவடிக்கை போதியளவு திட்டமிடப்படாமை. | 2.2.1 |
| | | 3. பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படாமை. | 2.10(அ)(ஆ) |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாக சேகரிப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்படுகளுக்காக அதிகாரமளிப் பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கு அந்த அரசின் நிதியத்திலிருந்து அதற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதெனவும் | 1. எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி மட்டம் பெற்றுக்கொள்ளப்படாமை.<br>2. பெறுகை செயற்பாடுகளை செயற்படுத்துவதில் உள்ள குறைபாடுகள்.<br>3. பொதுமக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுவதிலுள்ள குறைபாடுகள். | 2.1.2(அ)(ஆ)<br>2.2.2<br>2.9 |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரச ஏனைய மேலதிக ஏற்பாடுகள் தமது திணைக்களத்தினால் கடை பிடிக்கப்படுவதாகவும் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள ஏற்பாடுகள் வழங்குவதாகவும், | 1. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை<br>2. இணக்கமின்மை | 2.7 (அ),(ஆ) மற்றும் (இ)<br>2.16 |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு மற்றும் விநியோகம் என்பவற்றிற்காக போதியளவு உள்ளக சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குக் குறைபாடுகள் | 2.11 |
| 128(1)(உ) | அரசுக்கு சொந்தமான அல்லது அரசின் பொறுப்பில் காணப்படும் பணம், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவானதும் மற்றும் முறையான ஏற்பாடுகள் மேற்கொள்வதாகவும் அவற்றை | 1. வருடாந்த பொருள் மெய்மையாய்வில் குறைபாடுகள்<br>2. சொத்துக்கள் முகாமைத்துவத்தின் குறைபாடுகள் | 2.3(ஐ)<br>2.3 |

| | | | |
|---|---|---|---|
| | இடையிடையே மெய்மையாய்தல் செய்யப்படு வதாகவும், அவற்றை உரிய முறையில் தீர்த்தல் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அவ்வாறு தீர்த்தல் செய்வதற்கு உரிய பிரமாணங்களுக்கு மற்றும் அறிவுரைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் எனவும்,- | | |
| 128(1)(ஐ) | அரசாங்க அலுவல்கள் நிறைவேற்றும் போது எதிர்பார்க்கும் சிக்கனம், வினைத்திறமை, முறைசார் விதமாக மற்றும் நேர்மைத் தன்மை ஆகிய விடயங்கள் தொடர்பாக போதிய கவனத்துடனும் தனது திணைக்களத்தின் அலுவல்கள் மேற்கொள்வதெனவும் | முறையற்ற கொடுக்கல் வாங்கல் | 2.5 |
| 128(1)(க) | கணக்கீட்டு உத்தியோகத்தராகப் பொறுப்பேற்றிருக்கும் செலவுத்தலைப்பின் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமாக நிதியாண்டு முடிவில் ஓர் ஒதுக்கீட்டுக் கணக்கு, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது. (நிதிப்பிரமாணம் 150) | ஒதுக்கீடு கணக்கிலுள்ள குறைபாடுகள் | 2.10 |
| 128(1)(ங) | பிணை கட்டுவதற்கு ஆளாகியுள்ள உத்தியோகத்தர் கள் நடைமுறையிலுள்ள கட்டளைகளும் அறிவுறுத்தல் களுக்கும் இணங்க அவ்வாறு செய்கின்றன எனவும் | குறித்த உத்தியோகத்தர் களிடம் பிணை பெற்றுக் கொள்வதில் குறைபாடுகள் | 2.7(ஆ) |

| | | | | |
|---|---|---|---|---|
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களின்/ ஊழியர் களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர் களினால் பின்பற்றப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர் பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள்/ ஊழியர் கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுமெனவும் | 1. | சரியான மதிப்பீடு இன்றி சொத்துக்கள் அகற்றுதல் | 2.3(உ) |
| | | 2. | சொத்துக்களிலிருந்து அரசிற்கு கிடைக்க வேண்டிய வருமானங்கள் கிடைக்காமை | 2.3(இ) |
| | | 3. | கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல் | 2.3(அ), (ஆ) மற்றும் (ஈ) |
| | | 4. | நிதி முறைகேட்டுத் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் | 2.7 (ஐ) மற்றும் (க) |
| | | 5. | நட்டங்களும் சேதங்களும் | 2.6 |
| | | 6. | நட்டங்கள் தொடர்பான பொறுப்புக்கள் | 2.6 |

## 1.5 திணைக்களத்தின் குறிக்கோள்கள் மற்றும் பிரதான கருமங்கள்

---

(அ) வறுமையை நீக்குதல் மற்றும் சமூக நியாயத் தன்மை சான்றுபடுத்தும் சமூகம் ஒன்றினை உருவாக்குவதற்கு தேவையான அபிவிருத்தி அலுவல்களை செயற்படுத்துதல்;

(ஆ) ஆளுக்குரிய, குடும்ப, தொகுதி மற்றும் சமூகத்தை மையப்படுத்திய ஜீவனோபாய பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகளை மேம்படுத்தல்.

(இ) ஒவ்வொரு தனிநபர் மற்றும் குடும்பங்களுக்குமான உணவு பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்;

(ஈ) தேசிய அபிவிருத்தியை விரைவுபடுத்துவதற்காக பொதுமக்களை ஒன்று திரட்டல் மற்றும் வலுவூட்டுதல்;

(உ) பொதுமக்களின் ஜீவனோபாய அபிவிருத்தியை உயர்த்தும் விடயத்திற்காக நுண் நிதி வசதிகளை வழங்குதல்;

(ஊ) பொதுமக்களின் ஜீவனோபாய அபிவிருத்திக்கு தேவையான பௌதீக மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்;

(எ) பொதுமக்களின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தித் தேவைப்படக்கூடிய ஆய்வுகள் மற்றும் ஆராய்சிகள் அலுவல்கள் மேற்கொள்ளல்.

(ஏ) பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக மனித மூலதன அபிவிருத்தி செய்தல்; மற்றும்

(ஐ) சமூகப் பாதுகாப்பு ஒன்று தேவையான நபர்களுக்காக சமூகப் பாதுகாப்பு இணையம் ஒன்றினை வடிவமைத்தல்.

## 1.6 திணைக்களத்தின் கீழ் காணப்படும் நிறுவனங்கள் மற்றும் அதன்மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய செய்பணிகள்

---

திணைக்களத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் அவற்றினை செய்பணிகள் கீழ் காண்பிக்கப்படுகின்றன.

| | திணைக்களத்தின் கீழ் காணப்படும் நிறுவனங்கள் | நிறுவுவதற்கான அதிகாரம் | செய்பணிகள் |
|---|---|---|---|
| | --------------------------------------- | ------------------------------ | ------------------------ |
| i. | சமூக அடிப்படை வங்கிப் பிரிவு | 2013 இன் 1 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் 25 ஆம் பிரிவு | நுண் நிதி வங்கி அலுவல்கள், வாழ்வின் எழுச்சி நலன் பெருவோரின் சேமிப்புப் பழக்கத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் சமூக அடிப்படை வங்கி முறையை செயற்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல். |
| ii. | 1,074 சமூக அடிப்படை வங்கிகள் | மேற்படி | நலன்பெறுவோரிடையே நிதி முகாமைத்துவம் மற்றும் வங்கிக் கலாச்சாரத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் அவர்களை சேமிப்பதற்கு ஊக்குவித்தல், அங்கத்தவர்களின் கணக்குகளை பேணல், கடன் வழங்குதல் அரச மானியங்களை விநியோகித்தல். |
| iii. | 331 சமூக அடிப்படை சங்கங்கள் | 2013 இன் 1 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் 29 ஆம் பிரிவு | சமூக அடிப்படை வங்கிகளில் இருந்து வைப்புக்களை சேகரித்தல், அவற்றை முகாமைத்துவம் செய்தல், நலன் பெறுவோர் இடையே நுண் நிதியக் கலாச்சாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல் மற்றும் சமூக அடிப்படை வங்கி அலுவல்கள் செயற்படுத்தும் பிராந்திய நிறுவனம் ஒன்றாக செயற்படல். |
| iv. | வாழ்வின் எழுச்சி சமூக பாதுகாப்பு நிதியம் | 2013 இன் 01 இலக்க வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் 45 ஆம் பிரிவு | நலன் பெறுவோரின் பங்களிப்புத் தொகை பெற்று அவர்களின் வாழ்க்கை நிலைமை பாரதூரமாக வீழ்ச்சி அடைந்திருந்த போது அதற்காக சலுகை வழங்குதல் மற்றும் வறிய மக்களின் ஒட்டுமொத்த பொருளாதார சமூக நிலைமையை முன்னேற்ற அவர்களை போசித்தல். |
| v. | வீடைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியம் | மேற்படி | நலன்பெறுவோரின் பங்களிப்பு தொகையை பெற்று நலன்பெறு குடும்பங்களின் நலநோம்பளை அதிகரிப்பதற்காக தற்காலிக வீட்டுப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு ஒன்றினை வழங்குவதற்காக வீடமைப்பு கடன் திட்டமொன்று செயற்படுத்துதல் |

| | | |
|---|---|---|
| vi. | வங்கி காகிதாகிகள் மேற்படி சுழல் நிதியம் | நாடு பூராகவும் வங்கி காகிதாகிகள் ஒரே நிலைமை காணக்கூடியவாறு வாழ்வின் எழுச்சி சமூக அடிப்படை வங்கி மற்றும் வங்கி சங்கங்கள் பயன்படுத்தும் காகிதாகிகள் சலுகை விலைக்கு மையப்படுத்தப்பட்டு அச்சிட்டு விநியோகித்தல் |
| vii. | வாழ்வின் எழுச்சி மேற்படி நிதியம் | வருமானம் உருவாக்கும் செயல்முறை ஒன்றினை அறிமுகப்படுத்திய வறிய மக்களை சுயதொழில்களுக்காக தொடர்புபடுத்தி நிலைபேறாக வலுப்படுத்தல். |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றுகை

#### 2.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் நிறைவேற்றபட வேண்டிய 39 பிரதான விடயங்கள் காணப்பட்டதுடன், அந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,200 மில்லியன் இற்கான தொகையை ஜுன் 30 திகதியில் உள்ளவாறு மாவட்ட அலுவலகங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த 15 சதவீதமாகிய ரூபா 183.99 மில்லியன் தொகையும், பயன்படுத்திய தொகை ரூபா 124.85 மில்லியன் ஆக காணப்பட்ட போதிலும் வருட இறுதி அளவில் 95.7 சதவீதம் அதாவது ரூபா 1,148.70 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தமையால் திட்டமிடப்படாதவாறு வருட இறுதியில் செலவிடப்பட்டு செயல் நடவடிக்கைத் திட்டம் திசெம்பர் 28 திகதி மீண்டும் இரண்டாவது தடவையாக திருத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஜீவனோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாடு பூராகவும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய உட்கட்டமைப்பு வசதிகளை இனங்காண்டிருக்காததுடன், ரூபா 99.25 மில்லியன் இற்கான ஏற்பாட்டு தொகையில் ரூபா 97.18 மில்லியன் 7 மாவட்டங்களின் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 2.1.2 கருமங்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியுள்ள கருமங்களை நிறைவேற்றாமை

செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கூட்டுத்தொகை ரூபா 25 மில்லியன் ஏற்பாடுகளின் மீது நிறைவேற்றுவதற்காக திட்டமிடப்பட்டிருந்த பின்வரும் 4 பிரதான கருமங்களை நிறைவேற்றுவதற்கு செயற்படாமல் அந்த ஏற்பாடுகளின் வருட இறுதியில் கணினிகள் கொள்வனவு செய்வதற்காக பயனபடுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | பிரதான கருமங்கள் | ஒதுக்கியிருந்த ஏற்பாடுகள் |
|---|---|---|
| | | ரூபா மில்லியன் |
| (i) | மென்பொருட்கள் மற்றும் வன்பொருட்கள் முறைமைகள் நிறுவுதல், VPN வசதிகளை தொடர்புபடுத்தல் மற்றும் இணையத்தளம் ஒன்றினை அறிமுகப்படுத்தல் ஆகிய கருமங்களின் கீழ் 1,074 சமூர்த்தி சமூக அடிப்படை வங்கிகளை கணினி மயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம். | 5.00 |
| (ii) | e வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் மனித வள முகாமைத்துவ மொடியுளரை அபிவிருத்தி செய்தல் | 5.00 |
| (iii) | e வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்திட்டம் நிகழ்ச்சித் திட்ட முகாமைத்துவ மொடியுலரை அபிவிருத்தி செய்தல் | 5.00 |
| (iv) | வாழ்வின் எழுச்சி சமூக அடிப்படை வங்கி உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அனைத்து உத்தியோத்தர்களுக்கு கணினி தொடர்பான பயிற்சிகள் வழங்குதல் | 10.00 |
| | மொத்தம் | 25.00 |

### (ஆ) எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை

மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டத்தில் காட்டியிருந்த 3 நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் 3,832 செயற்திட்டங்களுக்காக ரூபா 115.33 மில்லியன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதி அளவிலும் அவற்றில் 1,468 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்காததுடன், ஒதுக்கியிருந்த ஏற்பாடுகளில் ரூபா 52.57 மில்லியன் தொகை சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழ்வருமாறு,

| | நிகழ்ச்சித்திட்டம் | கருமங்களின் எண்ணிக்கை | ஒதுக்கியிருந்த ஏற்பாடுகள் | திட்டமிடப் பட்டிருந்த செயற்திட்டங்களின் எண்ணிக்கை | செலவிடப் படாத தொகை | நிறைவேற்றப்படாத செயற்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா மில்லியன் | | ரூபா மில்லியன் | |
| (i) | சமூக வலுப்படுத்தல் மற்றும் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 05 | 99.7 | 3,657 | 46.56 | 1,354 |
| (ii) | விற்பனை மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் | 01 | 0.63 | 25 | 0.14 | 02 |
| (iii) | சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டம் | 01 | 15.0 | 150 | 5.87 | 112 |
| | | 07 | 115.33 | 3,832 | 52.57 | 1,468 |

**(இ) எதிர்பார்த்த ஏற்பாடுகள் மிகைத்துள்ள செலவுகள் மேற்கொள்ளல்**

வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியுள்ள 05 நிகழ்ச்சித் திட்டங்களில் 09 செயற்பாடுகளுக்கான ஏற்பாட்டுத் தொகை ரூபா 299.1 மில்லியனாக இருந்தது. அந்த தொகை ரூபா 63,741 மில்லியனினால் மிகைத்து ரூபா 362.841 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அந்த மிகைத்தலை வேறு நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கிய பணத்தில் இருந்து மற்றும் வங்கி மேம்படுத்தல் நிதியத்தில் இருந்து தீர்க்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | நிகழ்ச்சித்திட்டம் | செயற்பாடுகளின் எண்ணிக்கை | திட்டமிட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை | ஏற்பாடுகள் | செலவுகள் | நிறைவேற்றப்பட செயற்திட்டங்களின் எண்ணிக்கை | ஏற்பாடுகளை மிகைத்து செலவிடல் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | | ரூபா மில்லியன் |
| (i) | ஊடக நிகழ்ச்சித் திட்டங்கள் | 04 | 63 | 9.30 | 16.371 | 03 | 7.071 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (ii) | சமுர்த்தி அருனலு சிறு மற்றும் மத்திய அளவிலான செயற் திட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 02 | இனங்காண ப்பட்டிருக்க வில்லை | 145.00 | 164.850 | இனங்காணப்பட் டிருக்கவில்லை | 19.85 |
| (iii) | சமுர்த்தி உற்பத்தி மாதிரி கிராம நிகழ்ச்சித் திட்டம் | 01 | இனங்காண ப்பட்டிருக்க வில்லை | 18.60 | 43.600 | இனங்காணப்பட் டிருக்கவில்லை | 25.00 |
| (iv) | விஷேட செயற்திட்ட நிகழ்ச்சித்திட்டம் | 01 | இனங்காண ப்பட்டிருக்க வில்லை | 2.70 | 8.970 | இனங்காணப்பட் டிருக்கவில்லை | 6.27 |
| (v) | சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டம் | 01 | இனங்காண ப்பட்டிருக்க வில்லை | 123.50 | 129.050 | இனங்காணப்பட் டிருக்கவில்லை | 5.55 |
| | | ------ | | -------- | ------------- | | ---------- |
| | | 09 | | 299.1 | 362.841 | | 63.741 |
| | | === | | ===== | ===== | | ==== |

(ஈ) செயல் நடவடிக்கைத் திட்டத்திலுள்ள 03 நிகழ்ச்சித் திட்டங்களைச் சேர்ந்த 14 செயற்பாடுகளின் நிதி முன்னேற்றம் தொடர்பான அறிக்கையுடன் நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தும் பிரிவுகளினால் பேணப்பட்டிருந்த பதிவேடுகளை இணக்கஞ் செய்தபோது ரூபா 17.11 மில்லியனுக்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

**(உ) விசாரணை அலுவல்கள்**

திணைக்களத்தின் உத்தியோகத்தர்களினால் ஏற்படுகின்ற தவறுகள், மோசடிகள் மற்றும் குற்றவியல் தவறுகள் அதிகரித்துக்கொண்டு சென்றிருந்த போதிலும் விசாரணை அலுவல்கள் செயற்திறனுடன் நடைபெற்றிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டதுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 453 கோவைகளின் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.2 பெறுகை செய்முறையின் மூலம் வழங்கல் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்ளல்

### 2.2.1 பெறுகைகள் திட்டமிடல்

மீளாய்வாண்டின் போது பெறுகை செய்முறையினுடன் வழங்கல்கள் மறறும் சேவைகள் நிறைவேற்றிக் கொள்வதற்காக ரூபா 42.1 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 41.667 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஒதுக்கியிருந்த ஏற்பாடுகள் தொடர்பாக தயாரிக்கப்பட வேண்டிய பெறுகைத் திட்டம் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிககப்படுகின்றன.

**(அ) பெறுகை திட்டமிடல் மற்றும் ஆரம்ப கட்டம்**

பிரதான பெறுகைத் திட்டத்தில் 03 வருட காலப்பகுதிக்காக எதிர்பார்த்த பெறுகை அலுவல்களின் அட்டவணைப்படுத்துவதற்கும், அடுத்த வருடத்திற்கான பெறுகை அலுவல்கள் விரிவாக தயாரிப்பதற்கும் 06 மாதத்திற்கு மேற்படாத காலப்பகுதியில் அவ்வப்போது இந்த ஆவணங்கள் நாளதுவரை ஆக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) ஒப்பந்த வேலைக்கு முன்னர் உள்ள கட்டம்**

இந்த கட்டடத்தின் கீழ் தயாரிக்கப்பட வேண்டிய ஒவ்வொரு ஒப்பந்த வேலை கோவைகளும் (Package), பெறுகை செய்முறைகள் ஒவ்வொரு கட்டமும் முறைப்பிரகாரம் விவரிக்கப்படக்கூடிய விதத்தில் பெறுகை நேரசூசி மற்றும் ஆலோசனைக் சேவைகளுக்காக பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 பெறுகை செய்முறையினை செயற்படுத்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவை மற்றும் அதனுடன் தொடர்புடைய 2017 மார்ச் 15 திகதிய பெறுகை செயற்பாட்டு கோவைகளுக்கான பின்னிணைப்பு இலக்கம் 33 இல் 2:14.1 வழிகாட்டலின் பிரகாரம் தேசிய போட்டி அடிப்படையின் விலைமனு அழைத்தல் கடைபிடிக்கப்பட வேண்டிய ரூபா 11.31 மில்லியன் பெறுமதியான 114 டெஸ்டொப் கணினிகள், ஒப்பீட்டு விலைகள் கடைபிடித்து 02 பெறுகைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பெறுகை வழிகாட்டல் கோவையாக வழிகாட்டல் 4.3.1 இன் பிரகாரம் அனைத்து தொடர்புடைய செலவுகளையும் உட்படுத்தி மொத்தக் கிரய மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட வேண்டுமெனினும், அனைத்து கொள்வனவிற்கும் மற்றும் நிர்மாண வேலைகள் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

(இ) ஆண்டிற்கான தேவையை இனங்கண்டு பெறுகை செய்முறை கடைபிடித்து கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் 06 சந்தர்ப்பங்களில் ரூபா 1.00 மில்லியன் பெறுமதியான 31 டயர்கள் அரச வாணிப பலவின கூட்டுத்தாபனத்தில் இருந்து கொள்வனவு செய்திருந்தது. அதே போல் கொள்வனவு செய்தல் தொடர்பாக வழங்குனரிடம் அனுகியிருந்த உடன்படிக்கையில் டயர் வழங்கப்பட வேண்டிய குறித்த காலப்பகுதி மற்றும் தாமதக் கட்டணம் தொடர்பான நிபந்தனைகளுக்கு உட்படுத்தியிருக்கவில்லை. இதன் காரணமாக 3 சந்தர்ப்பங்களில் தனியார் வழங்குனர்கள் இருவரிடம் 31 டயர்கள் கொள்வனவு செய்த போது 14 நாட்கள் முதல் 38 நாட்கள் வரை டயர் வழங்குதில் காணப்பட்ட தாமதம் காலத்திற்கான தாமதக் கட்டணம் அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

**2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டு 4 வருடங்களை விட கூடுதலான காலம் கடந்திருந்த போதிலும் திணைக்களத்துடன் இணைந்த மூன்று அதிகாரசபைகளுக்கு மற்றும் மலைநாட்டு கிராம புனர்நிர்மாண திணைக்களத்திற்கு சொந்தமாக இருந்த காணிகள்

மற்றும் கட்டிடங்கள் ஆதனங்கள் அனைத்தும் அறுதியாக இனங்கண்டு முறைப்பிரகாரம் உரித்தாக்கியிருக்கவில்லை.

(ஆ) நாட்டில் 1,074 சமூக அடிப்படை வங்கிகள் மற்றும் 331 வங்கிச் சங்கங்கள் அமைந்துள்ள காணிகள் மற்றும் கட்டிடங்கள் இலங்கை சமூர்த்தி அதிகார சபைக்கு, ஏனைய அரச நிறுவனங்களுக்கும், வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களுக்கு ஆக பல தொகுதிகளின் கீழ் காணப்படும் ஆதனங்கள் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகார சபையினால் வாடகைக்கு கொடுத்திருந்த ஆதனங்களை திணைக்களத்திற்கு உரித்தாக்குவதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை அணுகுவதற்கு செயற்பட்டிருக்காததுடன் பழைய வாடகை ஒப்பந்தத்தின் பிரகாரம் தொடர்ந்து செயற்பட்டுக்கொண்டிருந்தது. அவற்றில் புத்தள கைத்தொழில் குடியேற்றத்தின் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ஆண்டிற்கு ரூபா 25,760 தொகை வீதம் வாடகைக்கு கொடுத்திருந்த காணியிலும், சிதைவற்ற நிலையில் 2013 ஆண்டு முதல் மூடப்பட்டு காணப்பட்ட கட்டிடமொன்றின் ரூபா 289,826 இற்கான நிலுவைவரி வருமானத்தையும் அறவீடு செய்தவற்காக முடியாதிருந்தது.

(ஈ) இலங்கை மலைநாட்டு அபிவிருத்தி அதிகார சபையினால் மத்திய மாகாண வீதிப் போக்குவரத்து அதிகாரசபைக்கு சொந்தமான காணி ஒன்றில் ரூபா 14.92 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 17 கடைகள் மற்றும் 02 கழிவறை முகாமைகளைக் கொண்ட கடுகண்ணாவ வர்த்தக தொடர் கட்டிடம் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடத்தை சாட்டுதல் செய்தல் அல்லது நடாத்தி செல்லல் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) மதிப்பீட்டு பெறுமதி ரூபா 2,650,000 தொகைக்கு ஏலவிற்பனை செய்வதற்காக பகிரங்கப்படுத்தியிருந்த, ரூபா 7,513,499 தொகைக்கான விலைமனு கிடைத்திருந்த 06 வாகனங்களை பின்னர் பாவணைக்கு உதவாதவை என ஆக்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. அவற்றில் 02 வாகனங்கள் ரூபா 820,500 தொகை சிதைவடைந்த வாகனங்கள என விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், மீதியுள்ள 04 வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

**(ஊ) வாகனப் பயன்பாடு**

திணைக்களத்திற்கு சொந்தமான மீளாய்வாண்டு இறுதி அளவில் 140 வாகனங்கள் காணப்பட்டதுடன், அவற்றில் தலைமை அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்த 53 வாகனங்கள் 17 உம் மாவட்ட அலுவல்களுக்கு இணைக்கப்பட்டிருந்த 87 வாகனங்களில் ஆக மொத்தம் 104 வாகனங்களின் ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்காத காரணத்தினால் ஆண்டின் போது ஓடிய தூரத்தின் எண்ணிக்கை கணிப்பதற்கு முடியாதிருந்தது. மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தின் எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய்ச் செலவுகள் ரூபா 25.11 மில்லியன் தொகையும், வாகன திருத்த வேலை வாகன சேவை மற்றும் வாகன காப்புறுதி செய்தல் உட்பட வாகனப் பராமரிப்பு செலவு ரூபா 38.18 மில்லியன் தொகையும் ஆக கூட்டுத்தொகை ரூபா 63.29 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**(எ) செயற்பாட்டு லீஸின் முறையின் கீழ் வாகனப் பயன்பாடு**

திணைக்களத்தின் செயற்பாட்டு லீஸின் முறையின் கீழ் 2017 ஏப்ரல் முதல் 05 வருட காலப்பகுதிக்காக பெற்றிருந்த ஜீப் வண்டிக்காக மாதாந்தம் ரூபா 227,700 வீதம் மீளாய்வாண்டின் 09 மாதங்களுக்காக லீஸின் தவணைப் பணமாக ரூபா 2,049,300 தொகையும், எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய் ரூபா 112,801 தொகையும்,

திருத்த வேலைச் செலவு ரூபா 30,090 தொகை ஆக சாரதி சம்பளம் மற்றும் படி தவிர மொத்த செலவு ரூபா 2,192,191 ஆக காணப்பட்டது. 2016 மார்ச் 17 ஆம் திகதிய 01/2016 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் இந்த வாகனத்தின் தகவல்கள் மற்றும் மாதாந்த ஓட்ட விபரங்கள் உட்படுத்தி பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஏ) வருடாந்த பண்டக் கணிப்பீடு நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 மார்ச் 31 திகதி 05/2016 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பந்தி 3.2 இன் பிரகாரம் 2018 ஜூன் 15 திகதிக்கு முன்னர் பண்டக் கணிப்பீட்டு செய்முறையை பூர்த்தி செய்து அவ் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்படவேண்டுமெனினும், 23 பிராந்திய அலுவலகங்களில் பண்டக் கணிப்பீட்டு அறிக்கை 2018 ஆகஸ்ட் 31 திகதி அளவிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது பண்டக் கணிப்பீடுகளின் மூலம் அகற்றப்பட வேண்டும் என இனங்காணப்பட்ட 03 பயிற்சி நிலையங்களின் மற்றும் 02 சுற்றுலா விடுதிகளைச் சேர்ந்த 118 பண்ட அலகுகளை அகற்றுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஐ) வெளித்தரப்பினர் கொடுத்திருந்த சொத்துக்கள்**

திணைக்களத்திற்கு சொந்தமான ரூபா 32.8 மில்லியன் பெறுமதியான 05 வாகனங்கள் வரிசை அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த வாகனங்களுக்கான எரிபொருள், திருத்த வேலை செலவு மற்றும் சாரதி படி மற்றும் மேலதிக நேரப்படி ஆக கடந்த ஆண்டின் போது ரூபா 1.67 மில்லியன் மற்றும் மீளாய்வாண்டின் போது ரூபா 1.36 மில்லியன் ஆக மொத்தம் ரூபா 3.03 மில்லியன் திணைக்களத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

**2.4 ஈடுபட்டு பொறுப்பு மற்றும் பொறுப்புக்கள்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வருடாந்த பாதீட்டு வரையறையை மிகைத்து ஈடுபாட்டு பொறுப்புக்களும் அணுகுதல்**

2017 ஏப்ரல் 27 திகதிய 255/2017 இலக்க கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 02 (அ) பந்திக்கு இணங்காமல் 14 செலவு விடயங்களுக்கு ஒதுக்கியிருந்த ரூபா 7,783.56 மில்லியனுக்காக ஏற்பாடுகளை ரூபா 2,952.92 மில்லியனினால் மிகைத்து ரூபா 3,005.14 இற்காக ஈடுபாட்டு பொறுப்புக்கள் ஏற்படுத்தியிருந்தது.

**(ஆ) பொறுப்புக்களை மிகையாகப் பதிவு செய்தல்**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நட்டஈடுகள் மற்றும் பணிக்கொடை பொறுப்புக்கள் ரூபா 3,276.49 மில்லியன் எனினும், அதனை ரூபா 3,423 மில்லியன் தொகை என ரூபா 146.51 தொகை என மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(இ) பாதீட்டு ஏற்பாடுகள் இன்றி பொறுப்புக்களை தொடர்ந்துவரும் ஆண்டிற்கு கொண்டுசெல்லல்

"செல்வம் படைத்த வீடு ஒன்று" நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2014 ஆண்டின் போது சமூக அடிப்படை வங்கி பிரிவின் நிதியத்தில் இருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,992.78 மில்லியன் தொகை பொறுப்புக்கள் என காட்டப்பட்டிருந்தது. எனினும், சமூக அடிப்படை வங்கி பிரிவினால் அறவிடப்பட வேண்டிய கடன்தொகை ரூபா 3,417.42 மில்லியன் தொகை குறிப்பிடப்பட்டிருந்தால் ரூபா 424.64 மில்லியனிற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. மேலும் மீளாய்வாண்டின் போது வாழ்வின் எழுச்சி நலன் பெறுவோர்களிடம் ரூபா 2,055.50 திருப்பி அறவிடப்பட்டிருந்த போதிலும் கடனை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்காமல் அந்தப் பணத்தை சமூக அடிப்படை வங்கியில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) பொறுப்புக்களுக்காக ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்காமை

மீளாய்வாண்டிற்காக செலவு விடயங்களின் கீழ் செலுத்த வேண்டியிருந்த ரூபா 382,500 இற்கான பொறுப்புக்களுக்காக ஏற்பாடுகள் ஒதுக்கியிருக்கவில்லை.

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் அணுகியிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறைசார் தன்மை இன்றி காணப்பட்டது. அவதானிப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

2013 இன் 01 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி சட்டத்தின் பிரிவு 7.1 இன் பிரகாரம் திணைக்களத்திற்கு உதவி செய்வதற்காக நிறுவப்பட்டிருந்த வாழ்வின் எழுச்சி தேசிய சபைக்கு நியமனம் செய்யப்பட்ட அங்கத்தவர்களுக்கு மற்றும் அதன் செயலாளருக்கு படிகள் செலுத்துதல் தொடர்பான அறிவுரை வழங்கியிருக்கவில்லை. அவ்வாறாயினும், அச் சபையின் 11 அங்கத்தவர்களுக்கு 2014 ஆண்டு ஜுலை முதல் 2017 ஜனவரி வரை 24 சபை அமர்வுகளில் கலந்து கொண்டதற்கான ஒரு அமர்வுக்கு ரூபா 4,000 தொகை வீதம் கூட்டுத்தொகை ரூபா 816,000 தொகையும், 2017 ஆண்டு பெப்ரவரி முதல் திசெம்பர் வரை 11 சபை அமர்வுகளில் கலந்து கொண்டதற்காக ஒரு சபை அமர்விற்கு ரூபா 6,000 வீதமும் மொத்த ரூபா 624,000 தொகையும் சபை செயலாளருக்கு 2017 ஆண்டு 10 சபை அமர்வுக்காக ஒரு அமர்விற்கு ரூபா 5,000 வீதம் ரூபா 50,000 தொகை படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.6 இழப்புக்களும் சேதங்களும்

தெரிவு கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது கண்டறிப்பட்ட இழப்புக்கள் சேதங்கள் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2011 ஆண்டில் விபத்துக்கு உள்ளாகிய லொறி வண்டிக்கு ஏற்பட்டிருந்த ரூபா 668,325 இற்கான நட்டம் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(3) இன் பிரகாரம் ஆரம்ப அறிக்கை மற்றும் குறைநிரப்பு அறிக்கை சமர்பித்திருந்த போதிலும் அந்த நட்டத்தை தீர்த்திருக்கவில்லை.

(ஆ) வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்துடன் இணைந்த மூன்று அதிகார சபைகளின் ரூபா 23,980 உத்தியோகத்தர்களுக்கு பணிக்கொடை செலுத்துவதற்காக திறைசேரியில் ஏற்பாடுகள் தாமதித்த காரணமாக சட்டத்தின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டிய மிகை விதிப்பு ரூபா 1,636.45 மில்லியன் தொகையினால் 2014 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 653.51 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2.7 தீர்த்திருக்காத கணக்காய்வு பந்திகள்

திணைக்களம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் அடங்கியுள்ள கணக்காய்வு பந்திகளின் மூலம் சுட்டிக்காட்டிய குறைபாடுகள் தொடர்பாக திணைக்களத்தினால் சரிசெய்திருக்காத பந்திகளுடன் தொடர்பு கீழ்வருமாறு.

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|---|
| | ஆண்டு | பந்தி இலக்கம் | |
| (அ) | 2015<br>2016 | 3.1(ஊ)<br>3.1(ii) | 1978 திசெம்பர் 19 திகதியில் 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று நாளதுவரை ஆக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2015<br><br>2016 | 3.1 (ஆ) மற்றும் 3.10.1 (ஆ)(iii)<br>3.18(ஆ) | நிதிப்பிரமாணங்கள் 880 மற்றும் 891 பிரகாரம் அரச உத்தியோகத்தர்களிடம் பிணை வைப்புக்கள் பெற்று பிணை பதிவேடு பேணுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | 2015<br>2016 | 1.1(ஈ)<br>3.18(இ) | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2015<br>2016 | 3.10.1(அ)<br>3.18(எ) | 2013 இல் 01 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் 36 மற்றும் 37 பிரிவுகளின் பிரகாரம் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி நிதியம் மற்றும் வாழ்வின் எழுச்சி சுழல் நிதியம் நிறுவி இருக்காமை. |
| (உ) | 2015<br>2016 | 3.10.1 (ஆ)(ii)<br>3.18 (ஏ) | நிதிப்பிரமாணம் 763 இன் பிரகாரம் தலைமை அலுவலகத்தில் களஞ்சியப் பண்டங்கள் மற்றும் காகிதாகிகள் சுழல் நிதியத்தின் இருப்பு தொடர்பாக களஞ்சிய நியதிச் சட்டங்கள் ஆக்கியிருக்கவில்லை. |
| (ஊ) | 2015<br><br>2016 | 3.10.1(இ)(i) மற்றும் (ii)<br>3.18(ஐ) | 1994 ஆகஸ்ட் 03 திகதிய 26/92 (1) ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் அலுவலர்களுக்கு ஒதுக்கிய வாகனங்கள் தவிர ஏனைய வாகனங்கள் அரச இலட்சினை மற்றும் திணைக்களத்தின் பெயர் பதிப்பதற்கும் சுற்றுநிருப ஏற்பாடுகளின் பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் எரிதல் தொடர்பாக உரிய முறையில் பரிசோதனை செய்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (எ) | 2015<br>2016 | 3.7(ஆ)<br>3.7(இ) | இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கடன், சுழல் நிதியத்திற்கும் பெற வேண்டிய ரூபா 130.16 மில்லியனிற்கான கடன் மீதி அறிவிடப்பட்டதற்கான தகவல்கள் சமர்பித்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | 2015<br>2016 | 3.6(ஆ)<br>3.5(இ) | 2013 ஆண்டின் போது வாழ்வின் எழுச்சி மானியங்கள் செலுத்துவதற்காக நுண்நிதி வங்கிப் பிரிவினால் பெற்றுக்கொண்டிருந்த ரூபா 3,457.5 மில்லியன் தொகையில் மேலும் தீர்க்கப்பட வேண்டிய ரூபா 2,374.5 தொகை தீர்ப்பதற்காக திறைசேரியில் இருந்து நிதி ஏற்பாடுகள் பெற்றுக்கொள்ளாமல் பொது வைப்புக் கணக்கிற்கு உட்படுத்தியிருந்தது. |
| (ஐ) | 2016 | 3.16(அ) | நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த கண்டி மாவட்ட செயலகத்தின் 2014 – 2016 காலப்பகுதியில் ஏற்பட்டிருந்த ரூபா 23,406,848 இற்கான பணமோசடி உட்பட 03 பிரதேச செயலகங்களில் 2015 – 2016 ஆண்டுகளின் போது ஏற்பட்டிருந்தென கண்டறிந்திருந்த ரூபா 24,888,966 இற்கான நிதி மோசடிகள் தொடர்பாக விசாரணை அலுவல்கள் பூர்த்தி செய்து நட்டங்களை அறவீடு செய்திருக்கவில்லை. |
| (ஒ) | 2016 | 3.14(ஆ) | 2016 ஆண்டின் போது நிதி ஒதுக்கீடு செய்திருக்காத ஆனால் முதலீட்டு செலவு விடயத்திற்கு செலவினமொன்றாக அங்கெலிபிடிய நீர் செயற்திட்டத்தை விரிவுபடுத்துவதற்காக 2016 ஆகஸ்ட் 16 திகதி மத்திய மாகாண பிரதான செயலாளருக்கு வழங்கியிருந்த ரூபா 32.5 மில்லியன் தொகையில் மீளாய்வாண்டு இறுதி வரை குறிப்பிட்ட விடயம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஓ) | 2016 | 3.17(அ) | கடந்த ஆண்டுகளின் போது கடமை அல்லாத பிரயாணங்களின் போது ஏற்பட்டிருந்த 2 வாகன விபத்துக்கள் மற்றும் மீளாய்வாண்டின் போது ஏற்பட்டிருந்த வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணங்கள் 104 இன் பிரகாரம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பொறுப்பு சொல்ல வேண்டிய நபர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஔ) | 2016 | 3.9(அ)(ii) | வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்துடன் இணைந்த மூன்று அதிகார சபைகளின் நிதிக்கூற்றுகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 289,664,277 தொகை 2017 திசெம்பர் 31 வரை அறவீடு செய்தவற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (க) | 2016 | 3.11(அ)(ii) | திணைக்களத்தினால் நடாத்தப்பட்டுவரும் சமூக பாதுகாப்பு நிதியம், வீடமைப்பு அபிவிருத்தி நிதியம், வங்கிச் சங்கங்களுக்காக காகிதாகிகளுக்கான சுழல் நிதியம், ஊழியர் கடன் சுழல் நிதியம், வாழ்வின் |

எழுச்சி நிதியம், வாழ்வின் எழுச்சி சமூக பாதுகாப்பு நிதியம் ஆகிய நிதியங்கள் தொடர்பாக திறைசேரியில் இருந்து அறிவுரைகளை பெற்று அவற்றை சட்டரீதியானவையை ஆக்குவதால் வருட இறுதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.8 முகாமைத்துவ பலவீனங்கள்**

தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை ரூபா 107.53 மில்லியன் செலவில் நடாத்தப்பட்ட குறைந்த வருமானம் உடையோர்களை இனங்காணும் கணிப்பீட்டின் மூலம் கணிப்பீட்டு பத்திரங்கள் 2,224,432 தொகை தரவு முறைமைக்கு உட்படுத்தி கணிப்பீட்டு விளைவுகள் பெற்றிருந்த போதிலும் உதவி நிதியம் பெறும் பெயர் பட்டியலை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சமூர்த்தி நலன்பெருவோருக்கு மற்றும் குறைந்த வருமானமுடையோருக்கு ஜீவனோபாய வழிகளை அபிவிருத்தி செய்தவற்காக சுழல் முறையில் கடன் வழங்குவதற்கு சமூர்த்தி சமூக அடிப்படை வங்கியில் செயற்படுத்தப்பட்ட ஜீவனோபாய சுழல் கடன் நிதியம் நியதிச் சட்ட நிதியம் ஒன்றாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2017 திசெம்பர் 31 திகதிய உள்ளவாறு இந்த நிதியக் கணக்கின் மீதி ரூபா 3,242.06 மில்லியன் தொகையும், தொடர்ந்து கடன்கொடுக்கக்கூடிய தொகை ரூபா 1,445.76 மில்லியன் தொகை என அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ) 1996 ஆண்டின் போது சிகரட் மற்றும் போதை ஒழிப்பு திகதிக்கு ஒத்த நிகழ்வாக கொடி விற்பனை வருமானத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட வாழ்வின் எழுச்சி சமூக அபிவிருத்தி மன்றம், திறைசேரியின் அறிவுரைகளை பெற்று சட்டரீதியாக்கி கணக்கு ஏடுகளை பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அம் மன்றத்தின் குறிக்கோளாகிய சமூர்த்தி நலன்பெறுவோர்களின் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோரின் சமூக நலனோம்பு விடயங்களுக்காக பயன்படுத்தாமல் மீளாய்வாண்டின் போது உழைத்த ரூபா 185,561,454 இற்கான வருமானத்துடன் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 264,171,603 இற்கான தொகையொன்று தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

(ஈ) 20 சமூக அடிப்படை வங்கி மற்றும் வங்கி சங்கங்கள் சமூர்த்தி அதிகாரசபையின் காலத்தில் ஏற்பட்டிருந்தவை என கண்டறியப்பட்ட நிதி மோசடிகள் பெறுமதி ரூபா 9,923,380 தொகையும், வாழ்வின் எழுச்சி திணைக்களங்கள் நிறுவப்பட்ட பின்னர் 2014 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை சமூக அடிப்படை வங்கிகள் மற்றும் 45 வங்கி சங்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தவை என கண்டறியப்பட்டிருந்த ரூபா 79,361,724 இற்கான மோசடிகளில் ரூபா 60,284,808 இற்கான தொகை தொடர்பாக விசாரணை விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், வங்கி சங்கமொன்றின் மேற்கொள்ளப்பட்டிருந்த மோசடிகளின் பெறுமதியினை கணித்திருக்கவில்லை.

**2.9 பொது மக்களுக்கு சேவை செய்தல்**

திணைக்களத்தினால் 2016 இன் 12 ஆம் இலக்க தகவல்கள் அறிந்து கொள்ளும் உரிமை தொடர்பாக சட்டத்தின் பிரகாரம் பொதுமக்களுக்கு தகவல்களை அறிந்து கொள்வதற்காக முறையான விதமாக உத்தியோகத்தர் ஒருவர் நியமணம் செய்திருக்கவில்லை. அதேபோல்

அந்த சட்டத்தின் பிரிவு 26(1) இன் பிரகாரம் திணைக்களத்தின் இணையதளத்திற்கு தகவல்கள், உத்தியோகத்தரின் விபரங்கள் மற்றும் தொடர்புபட்டுள்ள விபரங்கள் ஆகியவற்றை உட்படுத்துவதற்கும், அந்த தகவல்கள அலுவலக வளவில் பகிரங்கப்படுத்துவதற்கு, முறையான பதிவேடுகள் மற்றும் கோவைகள் பராமரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.10 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு**

2013 இன் 01 இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் மூலம் 2014 ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்ட வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் 2014 ஆண்டின் அலுவல்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கியிருந்த ஏற்பாடுகளின் மூலம் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் 2015 முதல் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 03 வருட காலப்பகுதியில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு மீதான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2015 | மீண்டுவரும் | 53,439.90 | 51,306,09 | 2,133,81 | 3.99 |
| | மூலதன | 1,319.95 | 1,024,00 | 295.95 | 22.42 |
| | **மொத்தம்** | **54,759.85** | **52,330.09** | **2,429.76** | **4.44** |
| 2016 | மீண்டுவரும் | 57,010.32 | 53,463.06 | 3,547.26 | 6.22 |
| | மூலதன | 1,247.60 | 1,183.36 | 64.24 | 5.15 |
| | **மொத்தம்** | **58,257.92** | **54,646.42** | **3,611.50** | **6.20** |
| 2017 | மீண்டுவரும் | 56,777.05 | 2,685.88 | 4,091.17 | 7.21 |
| | மூலதன | 1,236.70 | 1,179.34 | 57.36 | 4.64 |
| | **மொத்தம்** | **58,013.75** | **53,865.22** | **4,148.53** | **7.15** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூலதன செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1.00 மில்லியன்களுக்கான மொத்த தேறிய ஏற்பாடுகளும் பயன்படுத்தாமல் சேமிக்கப்பட்டுள்ளது.

(ஆ) 10 செலவு விடயங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 5,758 இற்கான மிகை ஏற்பாடுகள் மேற்கொண்டிருந்த காரணத்தினால் அந்த செலவு விடயங்களுடன் தொடர்பு ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 16.147 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தியிருந்ததுடன், சேமிப்பு ஒதுக்கியிருந்த தேறிய ஏற்பாடுகளில் 11 சதவீதம் முதல் 87 சதவீதம் வரையான வீச்சு அளவினை கொண்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது செலவிடப்படாத நிவாரண உதவிப் பணம் ரூபா 9,985 மில்லியன் தொகை செலவு விடயம் ஒன்றிற்கு மிகை விதிப்புச் செய்யாமை மற்றும் மாதத்திற்கான உள்ளவாறான நிவாரண செலவுகளை கணிக்காமல் மதிப்பிடப்பட்ட உச்ச அளவு அறிக்கையின் பிரகாரம் நிவாரண உதவி செலவு

கணிக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான ரூபா 39,707,051 மில்லியன் நிவாரண உதவியில் சரியான தன்மையில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஈ) வறுமையை அகற்றும் ஜீவனோபாய அபிவிருத்தி செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக முதலீட்டு செலவுகளின் கீழ் மீளாய்வாண்டிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 23,260 மில்லியன் உட்பட 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 102,766 மில்லியன் தொகை நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அந்த சொத்துக்களை ஒதுக்கீட்டுக் கணக்கிற்கு உட்படுத்தியிருக்கவில்லை.

(உ) 20 செலவு விடயங்களுக்காக கணக்கு பொழிப்பின் மூலம் சீராக்கல்கள் என மிகைவிதிப்பு செய்திருந்தது ரூபா 89.14 மில்லியன் தொகை எந்த அலுவலகத்திற்கு உரிய எந்த வீதமான சீராக்கல்கள் என இனங்கண்டிருக்கவில்லை.

(ஊ) தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் பெறுமதி ரூபா 221.30 மில்லியன் தொகை மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதி ரூபா 10.83 தொகை ஆக ஒதுக்கீட்டு கணக்கில் காட்டப்பட்டிருந்த போதிலும் அதற்காக அட்டவணைகள் சமர்பித்திருக்கவில்லை.

(எ) திணைக்களத்துடன்கு இணைந்த நிறுவனங்களுக்கு உரித்தில்லாத ரூபா 31.50 மில்லியன் பெறுமதியான ஆதனங்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் உட்படுத்தப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் போது ரூபா 2.2 மில்லியன் பெறுமதியான வாகனம் ஒன்று இரண்டு முறையும், 1999 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 1.82 மில்லியன் இற்கான வாகனம் ஒன்றும் ஒதுக்கீட்டுக் கணக்கில் உட்படுத்தியிலிருந்தமையால் ஒதுக்கீட்டுக் கணக்கில் வாகனங்களின் பெறுமதி ரூபா 4.02 மில்லியனினால் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது.

## 2.11 அரச ஊழியர்கள் முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 33101 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 350.00 | 324.91 | 265.00 | 265.73 | 600.00 | 96.41 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2002 மற்றும் 2003 ஆண்டுகளின் போது இடமாற்றம் பெற்று சென்றுள்ள இரண்டு உத்தியோகத்தர்களிடம் ரூபா 607,109 இற்கான கடன்மீதி அந்த நிறுவனங்களுக்கு

சாட்டுவதற்காக நடவடிக்கை எடுக்காமல் முற்பணம் பீ. கணக்கில் இருந்து அகற்றி செலுத்த வேண்டிய மீதிகள் என பொதுவைப்புக் கணக்கிற்கு உட்படுத்தியிருந்தது.

(ஆ) கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த இணக்கக்கூற்றின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, இறந்துள்ள, ஓய்வு பெற்றுள்ள, இடைநிறுத்தல் மற்றும் சேவையில் இருந்து நீக்கப்பட்ட 129 உத்தியோகத்தர்களிடம் அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,020,195 தொகையாக காணப்பட்டதுடன், அந்த நிலுவை மீதிகள் 03 மாதங்கள் முதல் 20 வருடங்கள் வரையான கால வீச்சு முதல் காணப்பட்டது. அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்தவதற்கு திணைகளத்திற்கு இயலாதுள்ளது.

## 2.12 கட்டுநிதிக் கணக்கு

மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தினால் தயாரித்திருந்த கட்டுநிதி மதிப்பீட்டின் பிரகாரம் மாதாந்தம் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட கட்டுநிதிகள், மாதாந்தம் விண்ணப்பித்த கட்டுநிதிகள் மற்றும் பெற்றிருந்த கட்டுநிதிகள் தொடர்பாக விபரம் கீழே தரப்பட்டுள்ளன.

| | மாதம் | திட்டமிட்டிருந்தவாறு விண்ணப்பிக்க வேண்டிய கட்டுநிதி | விண்ணப்பித்திருந்த கட்டுநிதி | கிடைத்திருந்த கட்டு நிதி | திட்டமிட்டுள்ளவாறு விண்ணப்பித்திருந்த கட்டுநிதி இடையே வித்தியாசம் (மிகை/ குறைவு) | விண்ணப்பித்த கட்டுநிதி மற்றும் கிடைத்திருந்த கட்டுநிதி இடையே வித்தியாசம் |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 01 | ஜனவரி | 4,789.72 | 5,489.42 | 4,387.72 | (699.70) | 1,101.70 |
| 02 | பெப்ரவரி | 4,797.22 | 4,740.29 | 4,229.00 | 56.93 | 511.29 |
| 03 | மார்ச் | 4,790.72 | 5,780.34 | 4,254.50 | (989.62) | 1,525.84 |
| 04 | ஏப்ரல் | 5,051.92 | 5,831.38 | 4,476.51 | (779.46) | 1,354.87 |
| 05 | மே | 4,791.72 | 5,427.55 | 4,938.90 | (635.83) | 488.65 |
| 06 | ஜுன் | 4,800.72 | 5,363.67 | 4,204.00 | (562.95) | 1,159.67 |
| 07 | ஜுலை | 4,801.72 | 5,354.62 | 4,585.08 | (552.90) | 769.54 |
| 08 | ஆகஸ்ட் | 4,795.72 | 5,372.65 | 4,519.00 | (576.93) | 853.65 |
| 09 | செப்தம்பர் | 4,806.72 | 5,357.92 | 4,470.84 | (551.20) | 887.08 |
| 10 | ஒக்தோபர் | 4,805.72 | 5,254.02 | 4,390.89 | (448.30) | 863.13 |
| 11 | நவம்பர் | 4,811.72 | 5,293.32 | 4,536.22 | (481.60) | 757.10 |
| 12 | திசெம்பர் | 4,821.24 | 4,762.31 | 4,472.45 | 58.93 | 289.86 |
| | | 57,864.86 | 64,027,49 | 53,465,11 | 6,162.63 | 10,562.38 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்கீட்டு தவறு ஒன்றென திணைக்களத்தினால் இனங்கண்டிருந்த ரூபா 2,950,975 இற்கான மீதியொன்று தேறப்படாத வைப்புக்கள் என 2016 மார்ச் மாதம் முதல் வங்கி இணக்கக்கூற்றின் மூலம் முன்கொண்டுவரப்பட்டு காணப்பட்டது. இதன்

காரணமாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு திறைசேரியால் காட்டியிருந்த தீர்த்தல் சரியானதாக இருக்கவில்லை.

(ஆ) 2015 ஜூலை 14 திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணங்கள் 371(5) இன் பிரகாரம் குறிப்பிட்ட விடயம் முடிவடைந்து 10 நாட்களுக்குள் நிமித்த கட்டுநிதி தீர்க்கப்படவேண்டுமெனினும், 46 உத்தியோகத்தர்களுக்கு 78 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த ரூபா 1.61 மில்லியன் நிமித்த துணை கட்டுநிதி கருமம் முடிவடைந்து 21 நாட்கள் முதல் 09 மாதங்கள் வரையான காலதாமத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது.

(இ) உத்தியோகத்தர்களுக்கு முற்பணங்கள் வழங்கும் போது செலவுகளை உரிய விதத்தில் எதிர்வுகூறி இருக்காமையால் 15 உத்தியோகத்தர்களுக்கு 28 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 1,588,510 முற்பண தொகையின் கூட்டுத்தொகை ரூபா 649,595 இற்கான சேமிப்புக்கள் காணப்பட்டன. அவை வழங்கியிருந்த முற்பணக் கணக்கில் 20 சதவீதம் முதல் 78 சதவீதம் வரை அளவினை கொண்டதாக இருந்தது.

## 2.13 பொது வைப்புககணக்கு

திணைக்களத்தின் கீழ் காணப்படும் 05 பொது வைப்புக்கள் கணக்குகளில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,494,264 தொகையாக இருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 வருடங்களை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 602,026 தொகையான 21 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணங்கள் 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2016 ஆண்டின் போது சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேர்ப்பதற்காக போட்டிப் பரீட்சை நடாத்துவதற்காக சேகரிக்கப்பட்ட கட்டணத்தில் இருந்து மீதியான ரூபா 8,057,544 இற்கான தொகை ஒன்று திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்காமல் பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(இ) வாழ்வின் எழுச்சி திணைக்களத்துடன் இணைந்த 02 நிறுவனங்களின் 02 உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளை மூடி 2016 ஆண்டின் போது அனுப்பப்பட்ட ரூபா 2,673,641 தொகை, இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டியிருந்த தொகை ரூபா 23,161,741 தொகை மற்றும் திணைக்களத்தின் பயிற்சி நிலையம் மற்றும் சுற்றுலா விடுதிகளின் மூலம் உழைத்த வருமானத்தில் இருந்து செலவு கழிக்கப்பட்ட பின்னர் மீதியாகிய ரூபா 2,498,738 தொகை ஆக மொத்தம் ரூபா 28,334,120 தொகை அரச திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்காமல் பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் நுண் நிதி வங்கிப் பிரிவு மற்றும் சமூக பாதுகாப்பு பொறுப்பு நிதியத்தின் ரூபா 502.34 மில்லியன் தொகை பொதுவைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டு, அவற்றில் ரூபா 477.16 மில்லியன் இற்கான கொடுக்கல் வாங்கல்கள் மேறகொள்ளப்பட்ட பின்னர் மீதியாகிய ரூபா 25.18 தொகை 2017 திசெம்பர் 31 திகதி திருப்பி செலுத்தப்பட்டிருந்தது.

(உ) வழங்கியிருந்த ஆனால் கொடுப்பனவுக்காக சமர்பிக்கப்படாத 06 மாதங்களை மிகைத்துள்ள 108 காசோலைப் பெறுமதி ரூபா 1.46 மில்லியன் தொகையினை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்காமல் பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2012 ஆண்டு தொடர்பாக செலுத்தப்படாத வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் வெகுமதி ரூபா 150,000 தொகையினை தீர்க்காமல் பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

**2.14 வங்கிக் கணக்குகளை நெறிப்படுத்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டிய மீதிகள்**

திணைக்களத்தினால் 2017 ஆண்டின் போது செயற்படுத்தப்பட்டிருந்த உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கிற்கு மற்றும் 17 மாவட்ட அலுவலகங்கள் தொடர்பாக சமர்பித்திருந்த வங்கி இணக்கக்கூற்றுக்களை பரிசோதனை செய்தபோது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) வழங்கியிருந்த ஆனால் வங்கிக்கு சமர்பிக்கப்பட்டிருக்காத கூட்டுத்தொகை ரூபா 6.162 மில்லியன் பெறுமதியான 270 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்கள் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) சமர்பிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் வங்கியினால் நேரடிக் கொடுப்பனவு என காட்டப்பட்டிருந்த ரூபா 3.888 மில்லியன் பெறுமதியான 22 பதிவுகள் தொடர்பாக அதனது சரியான தன்மையினை கண்டு தேவையான சீராக்கல் மேற்கொள்வதற்கு 2018 ஜூன் 30 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.15 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

**கணக்காய்வு ஐயவினாக்களும் பதில் அளித்தலும்**

மீளாய்வாண்டின் போது திணைக்களத்திற்கு சமர்பிக்கப்பட்டிருந்த 8 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அனுப்பியிருக்காததுடன், தாமத காலம் 01 மாதம் முதல் 04 மாதங்கள் வரையான கால வீச்சு காணப்பட்டது. அந்த ஐயவினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 2,166.13 மில்லியன் தொகையாகும்.

**2.16 இணக்கமின்மைகள்**

**வரித் தேவைகளுடன் இணக்கமின்மைகள்**

2016 ஏப்ரல் 29 ஆம் திகதி 03/2016 இலக்கம் கொண்ட பொது முயற்சிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் வாழ்வின் எழுச்சி சமூக அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களின் முகாமைத்துவச் சபையின் அங்கத்தவர்களுக்கு 2017 ஏப்ரல் வரை செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,492,500 தொகையாக படி மற்றும் அந்த குழுவின் தலைவருக்கு மற்றும் செயலாளருக்கு சம்பளமாக 1/3 தொகையாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 190,791 இற்கான படிகள் ஆகவும், வாழ்வின் எழுச்சி தேசிய சபையின் அங்கத்தவர்களுக்கு மற்றும் செயலாளருக்கு 2017 ஜூன் வரை செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,124,000 இற்கான குழு அமர்வுப் படி 10 சதவீதம் ஆக செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 280,729 இற்கான உழைக்கும் போதே செலுத்தும் வரி அறவீடு செய்து உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.17 மனிதவள முகாமைத்துவம்**

**2.17.1 இணைக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

திணைக்களத்தில் பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான மற்றும் வெற்றிட பதவியணி மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தினால் ஆளணி வேதனங்கள் செலவின தொகுதிக்காக ரூபா 11,522.59 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 501 | 72 | 429 |
| (ii) | மூன்றாம் நிலை | 1,941 | 1,931 | 10 |
| (iii) | இரண்டாம் நிலை | 24,231 | 23,484 | 747 |
| (iv) | ஆரம்ப நிலை | 516 | 510 | 06 |
| | மொத்தம் | 27,189 | 25,997 | 1,192 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் திணைக்கள சேவைகள் இரண்டு தவிர மூன்று அதிகார சபைகளினால் இணைக்கப்பட்டிருந்த பதவியணி 1,049 தொகைக்கான சேவை யாப்பு ஒன்று மற்றும் பதவிகளுடன் தொடர்பான ஆட்சேர்ப்பு நடைமுறை என்பன அங்கீகரிக்கப்பட்டிருக்காமையால், ஆட்சேர்ப்பு, பதவிஉயர்வு ஓய்வு பெறுவித்தல் ஆகிய கருமங்கள் மேற்கொள்வதற்கு நியமனம் கடிதங்கள் வழங்க முடியாதிருந்தது. அத்தோடு 62 ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் 144 பேரும் இறந்த உத்தியோகத்தர்கள் காணப்பட்டனர்.

(ஆ) வாழ்வின் எழுச்சி மாவட்ட பணிப்பாளர் பதவிகள் 20 இனை இலங்கை நிர்வாக சேவை தரம் 1 இல் இருந்து நிரப்ப வேண்டியிருந்த போதிலும் பதவிக்கான கடமைகள் அணவல் செய்வதற்காக இலங்கை நிருவாக சேவையின் II மற்றும் III தரங்களில் மற்றும் இலங்கை திட்டமிடல் சேவையின் II ஆம் மற்றும் III ஆம் தர உத்தியோகத்தர்களினாலும் மூன்று பதவிகள் இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் I உத்தியோத்தர்களால் பதில் கடமை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தியிருந்தனர்.

(இ) இலங்கை கணக்காளர் சேவையில் I தரத்தில் 16 மாவட்ட கணக்காளர் பதவிகள் அந்த சேவையின் II மற்றும் III தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களை பதில் கடமை அடிப்படையில் அணவல் செய்திருந்ததுடன் 4 மாவட்டங்களுக்காக கணக்காளர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை.